செ.வெ.எண்-04 நாள்-01.09.2021

# அரியலூர் மாவட்டம்
# பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் அவசர கால மீட்பு ஒத்திகை செயல்முறை விளக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாவட்ட தீயணைப்புத்துறையின் சார்பில் பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் அவசர கால மீட்பு ஒத்திகை செயல் விளக்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (01.09.2021) பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், பேரிடர் காலங்களில் ஏற்படும் பேரிடர்களை எதிர்கொள்ளும் வகையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறையின் சார்பில் அவசர கால மீட்பு போலி ஒத்திகை செயல்முறை விளக்க காட்சி தீயணைப்பு துறையினரால் செய்து காட்டப்பட்டது.

அதன்படி, மழை வெள்ளக்காலங்களில் மழைநீர் தேங்கக்கூடிய தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்புகளை சுற்றி வெள்ள நீர் சூழ்ந்துகொள்ளும்போது அங்குள்ள பொதுமக்களை மீட்டு, பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லும் வகையில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும் ரப்பர் படகு மூலமாக மீட்பது, ஏரி, குளங்களில் நீச்சல் தெரியாத நபர்களை பாதுகாப்புடன் மீட்பது தொடர்பான ஒத்திகை, நிலநடுக்கம் உள்ளிட்ட பேரிடர் காலங்களில் கட்டிட இடுபாடுகளிலிருந்து உபகரணங்களின் உதவியுடன் மக்களை மீட்பது தொடர்பான ஒத்திகை, காற்று, மழைக்காலங்களில் சாலைகளில் விழும் மரங்களை மரம் அறுக்கும் கருவி மூலம் பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துவது தொடர்பான ஒத்திகை, வெள்ளக்காலங்களில் நீர்நிலைகளில் மாட்டிக்கொண்டவர்களை டயர் டியூப் மூலம் மீட்பது தொடர்பான ஒத்திகை, உள்ளிட்ட நிகழ்ச்சிகள் மற்றும் சுயநிலைவு இல்லாத நபர்களுக்கு உடனடியாக அவர்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முதலுதவி சிகிச்சை குறித்தும் தீயணைப்புத்துறையினரால் செயல்முறை விளக்கம் காண்பிக்கப்பட்டது.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததவாது,**

வரும் காலங்களில் ஏற்படும் மழை வெள்ளம் உள்ளிட்ட பேரிடர்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் வகையில் அனைவரும் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறையின் சார்பில் போலி பேரிடர் ஒத்துகை நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. இச்செயல்முறைகளை அனைத்துத்தரப்பு மக்களும் தெரிந்து வைத்துக்கொள்வதன் மூலம் பேரிடர் ஏற்படும் காலங்களில் நமது சுற்றி உள்ளவர்களுக்கு முதலுதவி செய்து, அவர்களையும் அவர்களது உடமைகளையும் பாதுகாத்துக்கொள்ள வழிவகை செய்யும். எனவே, அனைவரும் பேரிடர் மீட்பு செயல்முறைகளை தெரிந்துகொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.ஜெய்னுலாப்தீன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.சு.சுந்தர்ராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.அ.பூங்கோதை, பேரிடர் மேலாண்மை வட்டாட்சியர் திருமதி.விக்டோரியா, மாவட்ட தீயணைப்பு அலுவலர் திரு.ஹகீம்பாட்ஷா, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை நிலை அலுவலர்கள் திரு.புகழேந்தி, திரு.மோகன்ராஜ் மற்றும் அரசு அலுவலர்களும் கலந்துக்கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**